**அக்டோபர் 07**

## 12 சீஷர்களில் ஒருவனான யூதாஸ்காரியோத்து.

**வாசிக்க: மத்தேயு 26:15-50**

பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய். நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். உங்களில் ஒருவன் என்னை காட்டி கொடுப்பான் என ஆண்டவர் சீஷர்களிடம் சொன்னார்.
அப்போது அங்கே இருந்த யூதாஸ்காரியோத்து அவரை நோக்கி: ரபீ, நானோ? என்றான், அதற்கு அவர்: நீ சொன்னபடிதான் என்றார். என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான், அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்.




ஹலோ செல்லகுட்டிங்களா, ஆண்டவரோடு மூன்றரை வருடம் இருந்து, அவர் அன்பை ருசித்து ஒருமனிதன் அவருக்கு விரோதமாக மாற முடியுமா? யூதாஸ்காரியோத்து எவ்வளவு மோசமான மனிதனாக இருந்திருப்பான்? மேலேயுள்ள வேதவசனங்களை முதன் முதலில் வாசித்தபோது இந்த கேள்விகள் என் மனதில் எழுந்தது. இதற்கு பதில் தேட யூதாஸை குறித்த வாசித்தபோது அறிந்ததையே இன்று தியானிக்க போகிறோம். நம் ஆண்டவர் இராமுழுவதும் ஜெபித்த பின் தம் 12 சீஷர்களை தெரிந்தெடுத்தார். அப்படி தெரிந்தெடுத்தவர்களில் ஒருவன் தான் யூதாஸ்காரியோத்து. அப்படியென்றால் அந்த சமயத்தில் அவன் மிகவும் நல்லவனாகவே இருந்தான். அதன்பின்பு அவன் இப்படி மாறுவான் என இயேசப்பாவுக்கு தெரியாதா..? தெரியும். அவனிடமே அதை சொல்கிறார். தெரிந்தும் அவனை இராபோஜனத்தில் பங்கு கொள்ள அனுமதிகாகிறார். ஏன் தெரியுமா? அப்போதும் அவனுக்கு மனம் மாற வாய்ப்பு தந்தார். ஆனால் அவன் அப்படி செய்ய காரணமாயிருந்தது என்ன என பார்த்தால்;
1) பண ஆசை - பணம் தேவை ஆனால் பணஆசை கூடாது. அது ஆண்டவரை இரண்டாம் இடத்தில் தள்ளியது.
2) அவிசுவாசம் - ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை நம்பாமல் போனதே அவன் விழுதலுக்கு காரணமாயிருந்தது.
அருமையான செல்லங்களா இயேசப்பாவை விட யாரையாவது அதிகமாக நேசிக்கிறீங்களா…? அவர் வார்த்தையை நம்பமுடியலையா..? இன்று பெலன் கேட்டு ஜெபிக்கலாமா?

அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் என்றார்கள். லூக்கா 17:5

**ஜெபம்**

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே இதோ ஆவி ஆத்துமா சரீரத்தை அர்பணிக்கிறேன். விசுவாசத்தை வர்திக்கபண்ணும். உம்மையே முதலிடத்தில் வைக்க கிருபை தாரும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.



www.benscoloringpages.com